# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் – 16 அக்டோப[illegible]



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

தமிழ்நாடு. இந்தியா

☎04257-230030, 230382. Cell : 98427 - 30382

E-mail : kangayamcofc@eth.net

# நன்றி! நன்றி!! நன்றி!!!

**எ**ங்களது, **ஆறாவது வேதாகமக் கருத்தரங்கம்,** எல்லா வகையிலும் தேவ நாம மகிமைக்காய் நடந்தேற ஊக்கமாய் ஜெபித்த, கொடுத்து உதவிய அன்புள்ளங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறோம்.

கருத்துரை நிகழ்த்திய கனத்திற்குரிய **தேவ தாசர்களுக்கும்,** தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து வருகை தந்து, தேனிலும் இனிய தேவனுடைய வார்த்தைகளை கருத்துடன் கேட்டு மகிழ்ந்து பயன் பெற்ற **விசுவாசிகள்** அனைவருக்கும் நன்றி சொல்லுகிறாம்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதித்து வழி நடத்துவாராக!

– ஆசிரியர்

## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 1 |
| 2. | கிறிஸ்துவை அறிக்கையிடுதல் | 9 |
| 3. | எக்லீசியா வேதாகமக் கல்லூரி மாணவர் சேர்க்கை | 14 |
| 4. | ஆறாவது கருத்தரங்க செய்திகள்... | 15 |
| 5. | பெண்கள் பகுதி | 19 |
| 6. | வாலிபர் பகுதி | 24 |
| 7. | I தீமோத்தேயு ஒரு கண்ணோட்டம் | 27 |
| 8. | சிறுவர் பகுதி | 28 |
| 9. | போதிக்கப்பட்ட விசுவாசம் | 30 |

# THIRUMARAI AASAAN

PUBLISHED BY CHURCH OF CHRIST

Editor
S. Rajanayagam

Honorary Editor
J.C. Choate

Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India

*Pleading for the restoration of pure New Testament Christianity*

Vol.16 October- 2003 Issue-10


ஆசிரியர் உரை

## "பேசாதவனின் பிரசங்கம்"

**வி**சுவாச வீரர்களின் பட்டியலை ஏந்தி நிற்கும் எபிரெயர் நிருபம், ஏராளமான நீதிமான்களின் விசுவாச வாழ்க்கையை எடுத்துக் கொடுக்கிறது. இப்பட்டியலில் இடம் பெறாத, யோபு போன்ற வேறு சில தேவ மனிதர்களும் உண்டு. ஆனால், அவர்கள் எல்லோரைக் காட்டிலும் அல்லது அவர்கள் எல்லோருக்குள்ளும் ஒரே ஒருவனை வேதாகமம் வேறுபடுத்திக் காட்டுகிறது. இத்தனைக்கும், அவன் தனது வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசினதாக வேதாகமம் எங்கும் காணோம். கர்த்தருடனோ அல்லது தனது குடும்பத்தாருடனோ எதுவும் பேசினதாகக் கூட குறிப்பிடவில்லை. இவன் வாழ்வு பற்றி ஒரு சில வசனங்களே வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளது. (ஆதி. 4:1–8).

இருப்பினும், இவன் எல்லோருக்குள்ளும் சிறந்தவன் என்று பரிசுத்த ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டுள்ளான். இவனைப் பற்றி எபிரெயர் ஆசிரியர் இவ்விதம் கூறுகிறார். "விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான். அதினாலே அவன் நீதிமான் என்று சாட்சி பெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார். அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்". (எபி. 11:4).

எத்தனையோ நீதிமான்கள் வேதாகமத்தில் உண்டு. ஆபேலைப் பற்றிப் பேசிப் பிரசங்கிப்பது போலவே இவர்களைப் பற்றியும் நாம் பேசிப் பிரசங்கிக்கிறோம். ஆனால், அவர்களனைவருக்கும் ஆபேலுக்கும்

அடிப்படையில் ஒரு வேறுபாடு உண்டு. அவர்கள் மரித்தபின் "பேசப்படுகிறார்கள்". இவனோ மரித்த பின் "பேசிக் கொண்டிருக்கிறான்". இது என் கருத்தல்ல. வேதாகமம் தெள்ளத் தெளிவாக வலியுறுத்திக் கூறும் ஒன்று.

விசுவாசத்திற்காக வாழ்ந்து, விசுவாசத்திற்காக பாராட்டுப் பெற்று, விசுவாசத்திற்காக அங்கீகரிக்கப்பட்டு, விசுவாசத்திற்காக மரித்த முதல் மனிதன் இவன் தான். குடும்பத்தில் பிறக்கும் தலைப்பிள்ளைக்கு பெற்றோரிடம் தனிச் சிறப்பு உள்ளது போல், விசுவாசக் குடும்பத்தில், முதன் முதலாகப் பிறந்த இவனுக்கு பரிசுத்த ஆவியானவர் தனியொரு முக்கியத்துவம் தந்துள்ளார்.

சரி, இந்த சிறப்பான மனிதன் நமக்காக என்ன பேசுகிறான் என்று கவனிப்போம். இவன் பேசும் அனைத்தையும் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், நமக்குப் பிரயோஜனமாக இருக்கும் சிலவற்றை நாம் இங்கே கவனிப்போம்.

## I. "விசுவாசம்" பற்றி ஆபேலின் பிரசங்கம்

மரித்தும் பேசும் ஆபேல், நமக்குச் செய்யும் முதல் பிரசங்கம் **விசுவாசம்** பற்றியது. இதுபற்றிப் பேச விசுவாச வீரர்களின் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் அனைவருக்குமே தகுதியிருந்தாலும், இவரின் தகுதி அலாதியானது. நான் ஏற்கனவே சொன்னது போல, அத்தகுதியை இப்பூமியில் பெற்ற முதல் மனிதன் இவன். இவனுடைய விசுவாசத்திற்கு தேவனே சாட்சி பகர்ந்திருக்கிறார்.

ஆபேலின் விசுவாசம் வெளியாவதற்குக் காரணமாயிருந்தது, இவனும் இவன் சகோதரனாகிய காயீனும் கொண்டு வந்த காணிக்கைகளே. ஆம், இருவரும் காணிக்கை கொண்டு வந்தது குறித்து வசனம் இவ்வாறாகக் கூறுகிறது. ".... காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்தான். ஆபேலும், தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டு வந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார். காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கீகரிக்கவில்லை. (ஆதி. 4 : 3, 4). காயீனின் காணிக்கை ஏன் தள்ளப்பட்டது ஆபேலின் காணிக்கை ஏன் அங்கீகரிக்கப்பட்டதென்பதற்கு ஆதியாகமத்தில் போதுமான விளக்கம் இல்லாவிட்டாலும், எபிரெயரில் அதற்கு சரியான அர்த்தமும், முறையான விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆம், அங்கே உள்ள "அர்த்தம் மிகுந்த" வார்த்தை, "விசுவாசத்தினாலே" என்பது தான். நம்முடைய தேவன் இருதயத்தைக் காணக் கூடியவர். ஒரு செயலின் முடிவை அறியக் கூடியவர். மேலும், பட்சபாதமில்லாதவர் (ரோம.2:11). ஆகவே, காரணமில்லாமல் அங்கீகரித்தலையும், நிராகரித்தலையும் செய்திருக்க மாட்டார். இருவருடைய செயலையும் தனது நீதியின்படியாக சீர்தூக்கிப் பார்த்தபடியால் தான், எபிரெய ஆசிரியரைக் கொண்டு, "**விசுவாசத்தினாலே**" என்ற வார்த்தையை அங்கே வெளிப்படுத்தியுள்ளார்.

அப்படியானால், ஆபேல் எதை விசுவாசித்திருப்பான்? கொஞ்சம் சிந்தனைக்குத் தீனி போட்டுப் பார்ப்போம். எதை விசுவாசித்திருக்க வேண்டும்? எந்தப் பிரசங்கமும் அந்த நாட்களில் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. அப்படியானால் எப்படி விசுவாசித்திருப்பான்? ஆம், தனக்காகக் கொண்டு வரப்படும் காணிக்கை இப்படிப்பட்டதாக இருக்க வேண்டுமென்று தேவன் நிச்சயம் அவர்களுக்கு வெளிப்படுத்தியிருப்பார். சந்தேகம் வேண்டாம். தேவன் வெளிப்படுத்தினதை இவன் விசுவாசித்துள்ளான். தேவன் எதைக் கொண்டு வரவேண்டுமென்று சொன்னாரோ, எப்படிக் கொண்டு வரவேண்டுமென்று சொன்னாரோ, எவ்வளவு கொண்டு வரவேண்டுமென்று சொன்னாரோ, எப்பொழுது கொண்டு வரவேண்டுமென்று சொன்னாரோ அவைகளையெல்லாம் அவன் அப்படியே செய்துள்ளான். ஆகவே தான், தேவ அங்கீகாரம் இவனுக்குக் கிடைத்துள்ளது.

தேவனுடைய வெளிப்பாட்டின் மீது தனக்கிருந்த விசுவாசத்தை கிரியைகளோடு நடத்திக் காட்டினான். வெறும் விசுவாசத்தோடு நிறுத்திக் கொள்ளாமல் காணிக்கையைக் "கொண்டு வந்தான்" என்று வேதம் கூறுகிறது. அவன் விசுவாசம், கிரியைகளோடும், கீழ்ப்படிதலோடும் இருந்துள்ளது. கிரியை இல்லாத விசுவாசம் செத்ததென்று யாக்கோபு ஆசிரியர் அடித்துக் கூறுகிறார். (யாக்.2:26). ஆனால், காயீனுடைய விசுவாசம் செத்ததாக இருந்துள்ளது. தேவன் சொன்னதை விசுவாசித்துத்தான் காயீனும் காணிக்கை கொண்டு வந்துள்ளான். கிரியையும் ஓரளவு அவனிடம் இருந்தே உள்ளது. ஆனால், கீழ்ப்படிதல் அங்கே மறைந்து போய்விட்டது. நிராகரிப்புக்கு இது தான் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

தேவ அங்கீகரிப்புக்காகக் காத்துக் கொண்டிருக்கும் தேவனுடைய பிள்ளைகளே, நம்முடைய நிலை எப்படியுள்ளது? ஆபேலுடைய

"விசுவாசப் பிரசங்கம்" நமக்கு விளங்குகிறதா? நம்முடைய விசுவாசம் கிரியைகளோடும், கீழ்ப்படிதலோடும் உள்ளதா? கொஞ்சம் தற்பரிசோதனை செய்து பார்ப்போம். யாரைப்போல நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம்? கைவிடப்பட்ட காயீனைப் போலவா அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஆபேலைப் போலவா?

கீழ்ப்படிதலும், கிரியையும் இல்லாத விசுவாசத்தையும், காணிக்கையையும் கர்த்தர் ஏற்றுக் கொள்ளமாட்டார். பரிசுத்த ஆவியானவர் சாமுவேலைக் கொண்டு கூறுவதைக் கவனியுங்கள். ".... கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் சர்வாங்க தகனங்களும், பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்." (I சாமு.15:22). கர்த்தருக்கு எது பிரியம் என்று தெரிகிறதா?

ஆகவே, ஆபேலைப் போல தேவ அங்கீகாரத்தைப் பெறும் அனைத்து முயற்சிகளையும் நாம் எடுப்போம். தேவனுடைய சித்தம், வெளிப்பாடு ஆகியவைகளுக்கு, அதாவது வேத வாக்கியங்களுக்கு நம்மை முழுமையாக ஒப்புக் கொடுப்போம். வேத வசனங்களில் சொல்லப்பட்டிருக்கும் அனைத்து உபதேசங்களுக்கும் நம்மை முழுமையாகக் கீழ்ப்படுத்துவோம்.

## II. பாடுகள் பற்றி ஆபேலின் பிரசங்கம்

ஆபேல் நமக்காகச் செய்யும் அடுத்த பிரசங்கம் **பாடுகள்** பற்றியது. தேவனுடைய நாமத்திற்காகப் பாடு அனுபவித்த முதல் மனிதனும் இவன் தான். தன் உயிரை விடும் அளவுக்கு இவன் பாடு அனுபவித்துள்ளபடியால், பாடுகள் பற்றி நமக்கெல்லாம் பாடம் கற்றுக் கொடுக்க இவன் முற்றிலும் தகுதியானவனே.

இவனுக்கு நேர்ந்த நிலையைக் குறித்து வேதம் இவ்வாறாகச் சொல்லுகிறது. "காயீன் தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசினான் : அவர்கள் வயல் வெளியில் இருக்கும் சமயத்தில், காயீன், தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாக எழும்பி, அவனைக் கொலை செய்தான்." (ஆதி. 4 : 8). காணிக்கை செலுத்தப்பட்ட நாளுக்கும், ஆபேல் கொலை செய்யப்பட்ட நாளுக்கும் இடையே எவ்வளவு காலம் இருந்ததென்று தெரியவில்லை. ஆனால், அந்த நாளிலேயே கொலை செய்யப்பட்டான் என்று வேதம் கூறவில்லை.

ஆகவே, கொலை செய்யும் அளவு மூர்க்கமடைந்திருந்த தனது சகோதரனின் கோபாவேசத்திற்கு உள்ளான நிலையில், சில நாட்களையாவது இவன் கழித்திருக்க வேண்டும். அதாவது, தேவன் தனக்குக் கட்டளையிட்டிருந்தவற்றைச் செய்ததற்காக இவன் சரீரப்பாடுகளை அனுபவித்திருக்க வேண்டும். அதன் பிறகே, இவன் கொலைக்கு ஆளாகியிருக்க வேண்டும். நான் கூறும் இக்கருத்துப்படி நடந்திருக்க வாய்ப்பில்லையென்று சொல்ல முடியாது.

எப்படியோ, மரித்தும் பேசும் இம்மாமனிதன் தேவ சித்தத்தை ஒருவன் நிறைவேற்றும் போது, அல்லது நிறைவேற்ற விரும்பும் போது பாடுகளும் துன்பங்களும் உண்டு என்று அழுத்தம் திருத்தமாக நமக்கு சொல்லியிருக்கிறார்.

வேதாகமத்தின் பிற பக்கங்களை நாம் புரட்டிப் பார்த்தாலும், இதற்கு ஏராளமான சான்றுகள் உண்டு. யோசேப்பு, மோசே, தாவீது, எரேமியா, தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ, அப்போஸ்தலன் பவுல், ஸ்தேவான் என்று அநேக தேவ மனிதர்களை நாம் ஆதாரமாகக் காட்ட முடியும். இவர்கள் ஒவ்வொருவரும் என்னென்ன பாடுகளைப் பட்டார்களென்று விபரமாய்ச் சொல்ல இங்கே இடமில்லை. இந்தப் பாடுகள் இவர்களோடு முடிந்து போகவில்லை. தொடர்ந்து நடக்குமென்று வேதாகமம் கூறுகிறது. அப்போஸ்தலன் பவுலைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் இதை வெளிப்படுத்தியுள்ளார். "அன்றியும், கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்க விரும்பும் யாவரும் துன்பப்படுவார்கள்" (II தீமோ 3:12) என்று.

ஆகவே, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற விரும்பும் நம்முடைய வாழ்க்கையிலும் பாடுகள் இருக்கவே செய்யும். நமக்குத்தான் இந்தப் பாடுகள் என்று நினைத்து, சோர்ந்து, விசுவாசத்தில் பின் வாங்கிப் போக வேண்டாம். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ரோஜா மலர் படுக்கையல்ல. அது கல்லும், முள்ளும் நிறைந்த காட்டுப் பாதை. இந்த உண்மை தெரியாமல் கிறிஸ்தவத்தை அநேகர் ஏற்றுக் கொள்வதினால் தான், வந்த வேகத்தில் பின் வாங்கிப் போய்விடுகின்றனர்.

சந்தோஷமும், சமாதானமும், நித்திய ஜீவனும் கிறிஸ்தவத்திலே இருக்கிறதென்று வாக்குக் கொடுக்கும் அதே வேதாகமம் தான், பாடுகளும் உண்டென்று கூறுகிறது. ஒருவேளை, அந்தப் பாடுகளின் உச்சக்கட்டம் மரணமாகக் கூட இருக்கலாம். ஆபேலில் இருந்து எடுத்துக் கொண்டால் தேவனுக்காக மரித்தவர்கள் அநேகர் உண்டு. வேதாகம சரித்திரத்தில் ஒரு

சிலருடைய பெயரும், பிற சரித்திரத்தில் பலருடைய பெயரும் இடம் பெற்றிருக்கிறது.

தேவ நாமத்திற்காகப் பாடுகள் படும் பொழுது தான் பரலோக பாக்கியம் பெறும் வாய்ப்பு நமக்கு அதிகமாகிறது. அவர்கள் தான் பாக்கியவான்கள் என்று அழைக்கப்படுகின்றனர். மலைப்பிரசங்கத்தில் இயேசு கிறிஸ்து இது குறித்து கூறியுள்ளார். "நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்..." (மத்.5:10)" என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாகச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்" (மத்.5:11).

ஆகவே, அருமையானவர்களே, நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் வரும் பாடுகளைக் குறித்துக் கலங்காமல், ஆபேலைப் போல தேவ சித்தத்தை நிறைவேற்றுவதில் உறுதியாயிருந்து, ஆபேலைப் போல உயிரையே விட வேண்டியிருந்தாலும் சத்தியத்தில் நிலைத்திருப்போம். இக்காரியத்தில் நாம் ஆபேலின் பிரசங்கத்திற்கு செவிகொடுப்போம்.

## III. பாடுகளுக்கான பலனைப் பற்றி ஆபேலின் பிரசங்கம்

ஆபேலுடைய மூன்றாம் பிரசங்கம், பாடுகளுக்கான பலன் பற்றியது. ஒரு வேளை, தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதினால் வரும் பாடுகளைக் கண்டு நாம் பயந்து போய், கிறிஸ்தவ ஜீவியத்திற்கு முற்றுப் புள்ளி வைத்து விடலாமா என்று சிந்திப்போமானால், ஆபேலின் இப்பிரசங்கம் நமக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

தேவனுக்காக முதன் முதலாகப் பாடுகள் பட்டவன் ஆபேல் என்பதை நாம் கண்டோம். தனக்காக இரத்தம் சிந்திய ஆபேலை தேவன் மறக்கவில்லை. எபிரெய ஆசிரியரைக் கொண்டு கொடுத்த விசுவாசிகளின் பட்டியலில் இவனுக்குத்தான் முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. எத்தனையோ பேர் ஆபேலுக்கு இணையாக பாடுகள் பல பட்டு தேவனுக்காக வாழ்ந்து மரித்திருந்தாலும், **மரித்தும் பேசுகிறான்** என்ற சிறப்புப்பட்டமும் இவனுக்குத் தான் சொந்தமாக்கப்பட்டுள்ளது.

அதாவது, ஆபேல் வாழ்ந்து, மரித்து சுமார் 4000 ஆண்டுகளுக்கும் மேலாகியும் தேவன் அவன் விசுவாசத்தையும், செயலையும் மறக்காமல், இப்பூமியில் அவனுக்கு என்ன அந்தஸ்து கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுத்தார். நியாயத் தீர்ப்புக்குப் பிறகு, இதைவிட மேலான அந்தஸ்து, ஆம், நித்திய ஜீவன் என்ற அந்தஸ்தும், வாடாத ஜீவ கிரீடமும் அவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது.

நம்முடைய தேவன் நீதியுள்ளவர் என்பதை நாம் அறிவோம். அவருடைய பிள்ளைகளை அவர் நிச்சயம் கைவிடமாட்டார். தன்னுடைய சீஷர்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தால் கூட ஒருவன் அதற்குண்டான பலனை அடையாமற் போகான் என்று சொல்லும் தேவன், தனக்காக ஒருவன் சரீரப் பாடுகள் பல படும் போது சும்மா விட்டுவிடுவாரா, என்ன? நிச்சயம் விடமாட்டார். ஒருவேளை பூமியின் பாடுகளை அவர் அனுமதித்தாலும், மறுமையில் வாடாத ஜீவகிரீடத்தைத் தருவார்.

முதல் நூற்றாண்டுக் காலத்தின் பிந்திய காலங்களில் அநேக அல்லல்களுக்கு ஆட்பட்டு, சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருந்த கிறிஸ்தவர்களுக்கு ஆவியானவர் சொல்லும் போது, **நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே. இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாக பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான். பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரண பரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்**" என்று கூறியுள்ளார். (வெளி.2:10).

மேலும் அப்போஸ்தலன் பவுல் கொரிந்து சபையாருக்குச் சொல்லும் போதும், பாடுகளுக்குப் பலன் உண்டு என்றே கூறுகிறார். "ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (I கொரி. 15 : 58). இன்னும் பவுல் அப்போஸ்தலன், இளைஞன் தீமோத்தேயுவுக்குச் சொல்லும் போது, "நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது..." என்று கூறுகிறார். (II தீமோ.4:7,8).

போராட்டம் என்பதும் பாடுகள் தானே. ஒருவேளை பாடுகள் நிறைந்த போராட்ட வாழ்க்கையை தேவன், பவுலுடைய வாழ்க்கையில் அனுமதித்திருந்தாலும், ஜீவ கிரீடத்தை வாக்குத்தத்தமாக கொடுத்துள்ளார் என்பதைக் கவனித்தீர்களா? அவருக்காகப் பாடுபடுகிறவர்களை தேவன் வெறுமனே விட்டு விடுவதில்லை. நிச்சயமாக இல்லை.

ஆகவே, எனக்கு அருமையானவர்களே, நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் நமக்கு நேரிடும் துன்பங்களையும், சோர்வுகளையும் கண்டு நாம் திடனற்றுப் போக வேண்டாம். அது எந்த வகையான பாடுகளாக இருந்தாலும் கலங்க வேண்டாம். கிறிஸ்தவ ஜீவியத்தில் முனைப்பு

காட்டுவோம். ஊழியத்தை உற்சாகமாகச் செய்வோம். தைரியமாக செயல்ட்டுவோம்.

அன்பரே, மரித்தும் பேசும் ஆபேலுடைய பிரசங்கத்தைக் கொஞ்சம் கேட்டோம். இன்னும் நிறைய உண்டு. இருப்பினும், நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு அவைகளை ஜாக்கிரதையாய் நம்முடைய வாழ்வில் கடைபிடிப்போமாக, அப்படிச் செய்வோமானால் ஆபேலுக்கு பரலோக பாக்கியத்தை வாக்குத்தத்தம் செய்துள்ள தேவன் நமக்கும் அதைக் கொடுப்பார்.

ஆகவே, நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தை நம்பிக்கையோடும், தைரியத்தோடும் நடத்தி இம்மைக்குரிய ஆசீர்வாதத்தையும், மறுமைக்குரிய ஆசீர்வாதத்தையும் பெறுவோமாக!

**EZS ராஜநாயகம்**


# அருமையான வாய்ப்பு

**கிறிஸ்தவ பக்தி விருத்திப் பாடல்கள்** (320 பாடல்கள்) புத்தகம், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, அழகான பிளாஸ்டிக் கவருடன் உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பாடல் புத்தகத்தின் அடக்கவிலை **ரூ. 45/-** ஆனால், நாங்கள் உங்களுக்கு குறைந்த விலையில் அதை விநியோகிக்க முடிவு செய்துள்ளோம்.

பாடல் புத்தகத்தின் விலை **ரூ. 25/-** ஆனால் அதை தபாலில் பெற விரும்புவோர் அனுப்ப வேண்டிய தொகை **ரூ. 35/-.** உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.

தொடர்பு முகவரி

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**

தபால் பெட்டி எண் 27, காங்கயம் - 638 701. இந்தியா.

*குறிப்பு : M.O. கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதவும்.*

# கிறிஸ்துவை அறிக்கையிடுதல்

கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிடுவது, சுவிசேஷத்தின் மற்றொரு கட்டளையாகும். “அறிக்கை” என்கிற வார்த்தைக்கு, மற்றவருக்குத் தெரியப்படுத்துதல், வேறொருவருக்கு அறிவித்தல், ஏற்றுக் கொள்ளுதல், ஒருவர் பேரில் இருக்கும் விசுவாசத்தை தெரிவித்தல் என்று பொருள்படும். இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறதை ஒருவர் வெளிப்படையாகச் சொல்ல மனதுடையவராக இருக்க வேண்டும். இப்படி அவர் செய்ய மனதில்லாதவராக இருப்பாரானால், அவர் கர்த்தருக்குக் கீழ்ப்படிய ஆயத்தமாக இல்லை என்று பொருள், இப்படிப்பட்ட சூழலில் அவரால் கர்த்தருக்கு கீழ்ப்படியவும் முடியாது.

அறிக்கையிடுதலின் முக்கியத்துவத்தைப் பற்றி இயேசுவானவர் சொல்லும் போது, மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன் (மத். 10:32,33) என்கிறார்.

**இங்கே சில முக்கிய கருத்துக்களை நாம் கவனிக்கலாம்.**

❖ கிறிஸ்துவை அறிக்கை செய்யும்படி எல்லாரும் அழைக்கப் படுகிறார்கள். அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் அல்லது யாராயிருந்தாலும் பரவாயில்லை. இவ்வுண்மை அவர்களுக்கும் பொருந்தக் கூடியதாக இருக்கிறது.

❖ அறிக்கை என்பது, ஒருவர் செய்த பாவத்தைப் பற்றியதாக இராமல், கிறிஸ்துவைப் பற்றியதாக இருக்க வேண்டும். தன்னுடைய பாவத்தைக் கர்த்தர் நிவிர்த்தி செய்வார் என்ற திடமான நம்பிக்கை ஒருவனுக்கு வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

❖ இந்த அறிக்கை மனுஷர் முன்பாக செய்யப்பட வேண்டும். இக் காரியத்திற்கு அவர்கள் சாட்சியாக இருக்க வேண்டும். உண்மையில், ஒருவன் கிறிஸ்துவை விசுவாசித்தால், தான் அவர் மேல் வைத்திருக்கும் விசுவாசம் எல்லாருக்கும் தெரிய வேண்டுமென்று விரும்புவான்.

❖ கிறிஸ்துவை இப்படி அறிக்கையிடுகிறவனையே, கர்த்தர் தன் பரலோக பிதாவுக்கு முன்பாக அறிக்கையிடுவதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். பரலோகத்தின் பிதாவுக்கு முன்பாக தேவ குமாரன் நம்மைப் பற்றி அறிக்கையிடும் ஆசீர்வாதத்தை, அந்த கனமான காரியத்தைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். நம்மிடம் அவர் கேட்பதெல்லாம் என்ன? மனுஷர் முன்பாக அறிக்கையிடு என்பதே.

❖ கிறிஸ்துவை மனிதர்கள் முன்பு அறிக்கையிட மறுப்போரை, பரலோக பிதாவுக்கு முன் அறிக்கையிட அவரும் மறுத்துவிடுவார். அவரை அவர்கள் அறிக்கையிட மறுப்பதோடு, அவரை மறுதலிக்கிறார்கள், அவரை மறுதலிக்கிறவர்களை, அவரும் அப்படியே மறுதலிப்பார். இதுவும், யாராக இருந்தாலும், அவர்கள் எங்கு இருந்தாலும் அவர்களுக்கும் பொருந்தக் கூடியதாக இருக்கிறது.

ஆகவே, இந்த இரண்டு சிறிய வசனத்தில், இத்தனை கருத்துக்களும் அடங்கி இருக்கிறது. தன்னை மறுதலிக்கக் கூடியவர்களுக்கு முன்பு, இரண்டையும், அதாவது ஆசீர்வாதத்தையும் மற்றும் அதன் விளைவையும் முன் வைக்கிறார். அப்படி முன் வைத்தாலும், அதை அந்தந்த தனி நபரின் உரிமைக்கே விட்டு விடுகிறார்.

கிறிஸ்துவை அறிக்கையிடாதவர்களைப் பற்றி என்ன? அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லும் போது, **மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கை பண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள். இப்படிப் பட்டவனே வஞ்சகனும் அந்திக் கிறிஸ்துவுமாயிருக்கிறான்** (II யோவா 7) என்கிறார். யார் கர்த்தரை அறிக்கையிட வேண்டும் என்பது பற்றி பவுல் சொல்லுகையில், **பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்** (பிலிப் 2:11) என்கிறார்.

நாம் கவனிக்க வேண்டியது யாதெனில், இந்த அறிக்கையானது, வாயினாலே செய்யப்படுவதோடல்லாமல், இரட்சிப்புக்கு ஏதுவாக செய்யப்படுகிறது. கவனியுங்கள், "**என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்**" (ரோம 10:9,10)

இரட்சிக்கப்படுவதற்கு ஒருவர் செய்ய வேண்டியதெல்லாம், தன் பாவத்தை அறிக்கையிட்டு, கர்த்தரை ஏற்றுக் கொள்வதே என்று சிலர் தவறான முடிவுக்கு வருகிறார்கள். ஆனால் விசுவாசத்தை பற்றி என்ன? அறிக்கையிடுதல், விசுவாசத்தை அடிப்படையாக கொண்டதுதான் என்று ஒருவரால் நிச்சயமாக கூற முடியும், அப்படியானால், மனந்திரும்புதலைப் பற்றி என்ன? இங்கே அதைப் பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. ஆகவே எளிதாக காரியங்களை செய்துவிட வேண்டும் என்று நினைப்பவர்கள், அநேகர் பல காரியங்களை பார்க்கத் தவறுவதுண்டு. ஆனால், அடுத்த வசனமே கிறிஸ்துவை அறிக்கையிடுதலும், விசுவாசமும் இரட்சிப்பின் திட்டத்தின் ஒரு பகுதியாக எப்படிப் பொருந்தி வருகிறதென்று விளக்குகிறது. முதலாவதாக, ஒருவன், தன் இருதயத்தில் எப்படி விசுவாசிக்க வேண்டும் என்றும், அது நீதியுண்டாவதற்கு அல்லது இரட்சிப்புண்டாவதற்கு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, அறிக்கையினாலேயே ஒருவன் இரட்சிப்படைவதில்லை, மாறாக அவன் அறிக்கையிடுகையில், இரட்சிப்பை எதிர்நோக்குகிறான் அல்லது இரட்சிப்பு உண்டாக காத்திருக்கிறான். இரண்டாவதாக, இரட்சிப்புண்டாக அறிக்கை பண்ணப்படும் என்கிறார். இங்கே சொல்லப்படுகிற அறிக்கை, இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதாகும், இங்கேயும் இரட்சிப்புக்குள்ளாக அறிக்கை அல்ல. இரட்சிப்புண்டாகவே அப்படி செய்யப் படுகிறது. இந்த இரண்டிற்கும் மிகப்பெரிய வேறுபாடு உண்டு. வேறு வார்த்தையில் சொன்னால், கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைப்பதும், கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுவதும் இரட்சிப்பை நமக்கு கொண்டு வராது. ஒருவன் விசுவாசமும், அறிக்கையுமில்லாமல் இரட்சிப்படைய முடியாது. ஆனால், அது போதுமானதல்ல. இன்னும் இரட்சிப்படைவதற்கு அநேக காரியங்கள் தேவைப்படுகிறது.

இறுதியாக, ஞானஸ்நானத்திற்கு ஏற்றவனாக தன்னை ஆக்கிக் கொள்ள ஒருவன் அறிக்கையிட்ட சம்பவம் பற்றி நமக்கு ஓர் உதாரணம் உண்டு. அந்த நிகழ்வை நாம் படித்து விடுவோம். பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி : நீ எழுந்து, தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தரமார்க்கமாய்ப் போ என்றான். அந்தப்படி அவன் எழுந்து போனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும்

அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்து கொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து ஊருக்குத் திரும்பிப் போகும் போது, தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான். ஆவியானவர் : நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார்.

அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச் சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு : நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத்தெரியுமா என்றான். அதற்கு அவன் : ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொல்லி; பிலிப்பு ஏறி, தன்னோடே உட்காரும்படி அவனை வேண்டிக் கொண்டான்.

அவன் வாசித்த வேதவாக்கியம் என்னவென்றால் : அவர் ஒரு ஆட்டைப் போல அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப்பட்டார்; மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக் குட்டியைப் போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார். அவர் தம்மைத் தாழ்த்தின போது அவருடைய நியாயம் எடுத்துப் போடப்பட்டது; அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப் போயிற்று; அவருடைய வம்சத்தை யாராலே சொல்லி முடியும் என்பதே.

மந்திரி பிலிப்பை நோக்கி : தீர்க்கதரிசி யாரைக் குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக் குறித்தோ, வேறொருவரைக் குறித்தோ? எனக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்.

இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி : இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். அதற்குப் பிலிப்பு : நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன் : இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி;

இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும், மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள், பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு

போய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான் (அப் 8 : 26-39).

இப்பொழுது இங்கே என்ன நடந்தது என்பது பற்றி நமக்கு தெளிவாக தெரிகிறது. பிலிப்பு, கிறிஸ்துவைப் பற்றியும், அவருக்குக் கீழ்ப்படிய இவன் என்ன செய்ய வேண்டுமென்றும் பிரசங்கித்தான். பின்பு, கர்த்தரைப் பற்றி கற்றுக் கொண்ட அவன், அவருடைய சித்தத்திற்கு தன்னை ஒப்புக் கொடுக்க வேண்டும் என்று முடிவெடுத்தான். ஆனால், ஒன்றை இங்கே கவனியுங்கள், ஞானஸ்நானம் எடுப்பதற்கு முன்பாக அந்த எத்தியோப்பிய மந்திரி இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறானா என்று பிலிப்பு அறிந்து கொள்ள விரும்பினான். மந்திரி, அப்படி விசுவாசிப்பதை உறுதியாக கூறினான். அதற்குப் பின்பே, பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்க மனதுடையவனானான்.

இந்த உதாரணத்தின்படியேயும், கிறிஸ்துவை அறிக்கையிடுதல் பற்றிய மற்ற வசனப்பகுதிகளை முன்னிட்டும், ஒருவர் ஞானஸ்நானம் எடுத்துக் கொள்வதற்கு முன்பு, அவர் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறாரா என்று கேட்க வேண்டும். அவர் ஆம் என்று சொன்னால், ஞானஸ்நானம் கொடுக்க நாம் ஆயத்தமாகலாம்.

இந்த அறிக்கையைத்தான் நாம் நல்லறிக்கை என்கிறோம். ஏதாவது ஒரு அறிக்கையை நல்லறிக்கை என்று அழைக்க விரும்பினால், இந்த அறிக்கையைத் தான் நாம் அப்படி அழைக்க வேண்டும்.

ஆகவே, நாம் என்ன கற்றுக் கொண்டோம்? ஒருவன் தன் பாவத்திலிருந்து மன்னிப்பைப் பெற, சுவிசேஷத்தைக் கேள்விப்பட வேண்டும், விசுவாசிக்க வேண்டும், பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும், கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட வேண்டும். இறுதியாக பாவமன்னிப்புக்கென்று அவன் ஞானஸ்நானம் எடுத்துக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவை அறிக்கையிடுதல் என்பது, ஒட்டு மொத்த இரட்சிப்பின் திட்டத்தின் ஒரு பகுதிதான் அல்லது சுவிசேஷக் கட்டளைகளில் ஒன்றாக இருக்கிறது. ஆனால், அது மாத்திரம் ஒருவனை இரட்சிக்காது, அதேநேரத்தில் இது இல்லாமல் ஒருவன் இரட்சிக்கப்படவும் முடியாது. கர்த்தர் கொடுத்த முக்கியத்துவத்தை நாம் அதற்குத் தரும் போது மாத்திரமே அது முக்கியமானதும், வல்லமையானதுமுமாகிறது.

**J.C. Choate** **J.C. சோட்**

# எக்லீசியா வேதாகமக் கல்லூரி

மாணவர் சேர்க்கை அறிவிப்பு

# EKKLESIA BIBLE COLLEGE

***P.O. Box - 27, Kangayam - 638 701. India.***

**STUDENTS ADMISSION NOTIFICATION**

புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் முழு நம்பிக்கையும், நற்செய்தியை நானிலம் எங்கும் எடுத்துச் செல்ல வேண்டுமென்பதில் இணையில்லா ஈடுபாடும் கொண்ட வாலிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் உடனடியாக வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| **காலம்** | : | **3 வருடம்** (செமஸ்டர் முறை) |
| **Duration** | : | **3 Years (Semester System)** |
| **கல்வித் தகுதி** | : | **+2 தேர்ச்சி** (அல்லது) **பட்டப்படிப்பு** |
| **Qualification** | : | **+2 Pass (or) Any Degree** |
| **பட்டம்** | : | **வேதயியலில் இளங்கலை பட்டம்** |
| **Degree** | : | **B.B.S. (Bachelor of Biblical Studies)** |

**தகுதியுள்ளவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும்.**

விபரங்கட்கும், விண்ணப்பங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

இயக்குநர்

**எக்லீசியா வேதாகமக் கல்லூரி,**


தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. இந்தியா

✆ : (04257) 230030,


Cell : 98427 - 30382.

# Sixth Annual Bible Lectureship

October 2. 3 - 2003, Kangayam.




One View of the crowd who participated.




Another View of the crowd who participated

# ஆறாவது வேதாகம

## அக்டோபர்





ஆறாவது கருத்தரங்கில் பாடல் குழுவினர்





ஆறாவது கருத்தரங்கில் கருத்துரை நிகழ்த்தும்
சகோ. பிலிப் பாஸ்கர் (சென்னை)

# கருத்தரங்கம் - காங்கேயம்


## 2, 3 - 2003



ஆறாவது கருத்தரங்கில் கலந்து கொண்டோரின் ஒரு பகுதி




ஆறாவது கருத்தரங்கில் கருத்துரை நிகழ்த்தும
சகோ. E.K. நத்தானியேல் (சென்னை)




கருத்தரங்கில் வெளியிடப்பட்ட **திருமறையில் பெண்ணின் பங்கு** என்ற நூலின் அழ்கிய முகப்புத்தோற்றம்.

பெண்கள் பகுதி

# கணவருக்கு சரியானபடி உதவியாயிருக்கும் மனைவி

**கி**றிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே, புதிய ஏற்பாட்டின் உபதேசப்படி ஆண்கள் அனைவரும் சுவிசேஷத்தை சுமந்து அறிவிக்கிற பணியைச் செய்யும் தகுதி வாய்ந்தவர்கள். எனவே அவர்களுக்கு மனைவிகளாகும் சிலாக்கியத்தை பெற்ற நமக்கும், மனைவிகளாகப் போகும் அநேகருக்கும் வேதாகமம் எப்படிப்பட்ட போதனையளிக்கிறது என்பதை இம்மாதக் கட்டுரையில் பார்ப்போம்.

ஆதியிலே தேவன் ஆணையும், பெண்ணையும் தமது சாயலாக சிருஷ்டித்தார் (ஆதி : 1, 26, 27) என்று வாசிக்கிறோம். மேலும், ஆதாம் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்பதைக் கண்ட தேவன், அவனுக்கு ஏற்ற துணையை உண்டாக்கினார். இதுதான், மனுக்குலத்தின் முதல் திருமணம். இதனிமித்தம் புருஷன் தன் தகப்பனையும், தன் தாயையையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று தேவன் சொன்னார். எனவே, ஆதியிலேயே பெண் ஆணுக்கு உதவி செய்பவளாக இருக்க வேண்டும் என்பது தேவனுடைய திட்டமாயிருக்கிறது.

**உதவி செய்பவர்** என்ற வார்த்தை சுலபமாக புரிந்து கொள்ளக் கூடிய ஒரு வார்த்தைதான். நம் எல்லோருக்குமே தெரியும், "மற்றவர்களுடைய வேலையில் அவர்களுக்கு ஒத்தாசையாயிருந்து அந்த வேலையை முடிக்கச் செய்வதே" உதவியாகும்.

திருமணத்தின் மூலமாக இருவரும் ஒரே மாம்சமாகிறார்கள். ஆனால் இதை விட முக்கியம், ஆவியிலும், சிந்தையிலும் ஒருமித்திருப்பதேயாகும்.

**இப்பொழுது, நாம் எப்படி நம் கணவருக்கு அவர் செய்யும் ஊழியப் பணியில் உதவியாயிருப்பது என்பது பற்றி பார்ப்போம்:**

திருமணமான ஒரு பெண்ணின் முக்கியப் பங்கே அவள் ஒரு **கிறிஸ்தவ மனைவியாக** இருப்பதுதான். நாம் ஆரம்பத்திலேயே பார்த்தோம் பெண் ஆணுக்கு உதவிக்காரியாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறாள் என்று (ஆதி:2:18).

Iகொரி:11:7-ம் வசனத்தில், **நாம், நம் கணவருக்காக** உண்டாக்கப் பட்டிருக்கிறோம், நாம் தான் அவர்களுடைய மகிமையாயிருக்கிறோம்

என்று தேவன் தெளிவாகக் கூறியுள்ளார். நம்முடைய கணவனுக்கு மிகச் சிறந்த உதவிக்காரியாக இருப்பதென்பது மிக முக்கியம். நாம் சிறந்த உதவிக்காரிகளாக இருப்பதுதான் நம் வாழ்க்கை என்ற வட்டத்தின் மையமாக இருக்க வேண்டும்.

ஊழியக்காரராக இருக்கும் உங்கள் கணவர் பல கடினமான சுமைகளுடன் இருப்பார். அவர் தன் குடும்பத்தை போஷிக்க வேண்டும். சபைகளின் காரியங்களை நிறைவேற்ற வேண்டும். எப்பொழுது தேவைப்படுகிறதோ அப்பொழுதெல்லாம் சேவை செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும்.

**ஊழியக்காரராக இருப்பவரின் சில பொறுப்புகளை இப்போது பார்ப்போம்**

1. அவர்தான் வீட்டிற்கு தலையாயிருக்கிறார். (எபேசியர் 5 : 23)
2. அவர்தான் குடும்பத்தை பொருளாதார விஷயத்தில் பாதுகாக்கக் கூடியவர் (I தீமோத்தேயு : 5 : 8)
3. அவர்தான் பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்க்கக் கூடியவர் (எபேசியர் 6:4)
4. அவர்தான் தன் மனைவியை தன் சொந்த சரீரமாகப் பாவித்து அவளை புரிந்து கொண்டு அவளோடு வாழ்பவர் (எபே :5:28 I பேதுரு 3 : 7)
5. அவர்தான் சபையை சமுதாயத்திற்கு முன்பாக பிரகாசிக்க வைக்கும் பொறுப்பைப் பெற்றுள்ளார் (மத்.5:16)
6. அவர் இரவும், பகலும் வேலை செய்கிறவராக இருக்க வேண்டும் (I தெசலோ:2:9)
7. அவர் கட்டாயம் சபையின் தேவைகளை சந்திப்பதில் இளகிய மனதைப் பெற்றிருக்க வேண்டும். (எபேசி:4:32).
8. அவர் கட்டாயமாக தன்னில் உள்ள நம்பிக்கையைக் குறித்து பதில் சொல்வதற்குத் தயாராக இருக்க வேண்டும். (I பேதுரு : 3:15)
9. அவர் கட்டாயமாக தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் மறைத்து வைக்காமல் எல்லாவற்றையும் அறிவிக்கிறவராக இருக்க வேண்டும். (அப் :20-26)
10. அவர் கட்டாயமாக தன்னில் உள்ள நம்பிக்கைக்காக போராட வேண்டியவராயிருக்கிறார். (பிலி :1:20)

11. அவரும் அவரின் குடும்பமும் கட்டாயமாக சிறந்த முன்மாதிரியாக இருக்க வேண்டும். I தீமோத் :4:12.

**எந்த வகையில் உங்கள் கணவருக்கு நீங்கள் உதவியாயிருக்க முடியும்?**

❖ முதலாவதாக நீங்கள் உங்கள் கணவரை தேற்றுகிறவர்களாக இருக்க வேண்டும் (I தெச : 5:11). மகிழ்ச்சியை அளிப்பதற்கு உங்களால் தான் முடியும். நீங்கள் தான் அவருடைய **வேலையைக் கட்டுவதற்**கு உதவி செய்யும் நபர். நீங்கள் அவரை ஆதரித்து, ஊக்கப்படுத்த வேண்டும். இது அவர் தேவனுடைய வேலையைச் செய்வதற்கு பேருதவியாக இருக்கும். ஒருவேளை அவரை எதிர்க்கும் சிலர் இருப்பார்கள். அவருடைய வேலையைச் செய்யவிடாமல் தடுக்கும் சிலர் இருப்பார்கள். அவர் பலமாக தன் வேலையைச் செய்ய தேவன் உங்களை பயன்படுத்துவார்.

❖ இரண்டாவதாக, உங்கள் கணவனுக்கு நீங்கள்தான் கூட்டாளி. அவருடைய சிறந்த குணங்களை அறிந்தவரும் நீங்கள்தான். அவருடைய மோசமான குணத்தை அறிந்தவரும் நீங்கள் தான். அவர்மேல் அன்பு செலுத்துகிறவரும் நீங்கள் தான்.

நீதி : 31:11-12ல் ஞானி சாலொமோன் இவ்வாறாக கூறுகிறார், "அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும், அவன் சம்பத்துக் குறையாது. அவள் உயிரோடிருக்கும் நாளெல்லாம் அவனுக்குத் தீமையையல்ல, நன்மையையே செய்கிறாள்". அவர் செய்யும் தேவனுடைய வேலைக்கு இடையூறு வரும்படியாக நாம் எதையும் செய்து விடவும், அவருடைய தன்னம்பிக்கைக்கு குந்தகம் நேரிடும்படியாக நடந்து கொள்ளவும் கூடாது. மற்றவர்களிடம் பரிதாபத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நீங்கள் கட்டாயமாக ஒருபோதும் உங்கள் கணவரை பலியாக்கிவிடக் கூடாது.

நம்முடைய கணவன்மார்கள் நம்மிடம் வைத்துள்ள நம்பிக்கையின் ஒரு பகுதி நம்மிடம் உள்ள தாலந்துகளை தாராளமாக அவருக்கு கொடுப்பதாகும். அத்தோடு அவரை முழு மனிதனாக்குவதற்கு நீங்கள் உங்கள் தாலந்துகளை பயன்படுத்த வேண்டும். உதாரணமாக, நீங்கள் தாராளமாக மக்களிடம் பேசக் கூடியவர்களாக இருக்கலாம். அவர்களின் தேவைகளை சுலபமாக உங்கள் கணவரைக் காட்டிலும் நீங்கள் அறிந்து கொள்ளக் கூடியவர்களாக இருக்கலாம். பிறகு, நீங்கள் அவருக்கு மற்றுமொரு கண்களாகவும், காதுகளாகவும், ஆகி விட முடியும். அவர்களுடைய தேவைகளை உங்கள் கணவன் கவனத்துக்கு கொண்டு வருவீர்கள்.

❖ மூன்றாவதாக, நாம் நம் கணவருக்கு சிறந்த நண்பராக இருக்க வேண்டியது அவசியம். நீதி : 18 : 24-ல் கூறியுள்ளபடி நாம் சிநேகிதராக இருக்க வேண்டும்.

பிரசங்கி 4 : 9-10 வசனங்களை வாசித்துப் பாருங்கள். தேவன் சொல்கிறார். நீங்களும், உங்கள் கணவனும் இணைந்து பாடுபடுவது நல்லது. சோதனைகள் வரும் போது ஒருவரையொருவர் தாங்கிப் பிடிக்க அது உதவும். உங்களிடமிருந்து உங்கள் கணவருக்கு உதவி கிடைக்கவில்லையென்றால் சாத்தான் கொள்ளை கொண்டுபோய், சுலபமாக உங்கள் கணவரை தோற்கடித்து விடுவான்.

தன் உணர்வுகளையும், பிரச்சினைகளையும் எந்தத் தடையுமின்றி உங்களோடு பகிர்ந்து கொள்ள நீங்கள் இடம் கொடுக்க வேண்டும். ஆனால், காரியங்கள் சில உங்களிடம் சொல்லக் கூடாததும் இருக்கும் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். மற்றவர்கள் தன் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையை தான் மறுதலிக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். உங்களை பாதுகாப்பதும் உங்கள் கணவனின் வேலை.

தேவனுடைய வேலையை செய்வதற்கு இடையூறு வருவதாக இருக்குமானால், சில காரியங்களை நீங்கள் அவரிடம் பகிர்ந்து கொள்ளாமலும் கூட இருக்கலாம். உங்கள் கணவரை ஏளனப்படுத்துவதை நீங்கள் கேட்கக் கூடும். அவற்றை ஜெபத்தின் மூலமாக தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். பின்பு, உங்கள் மனதிற்குள்ளாக வைத்துக் கொள்ளுங்கள். ஆனால், ஏதாவதொரு வகையில் நீங்கள் அவருக்கு உதவி செய்ய முடியும். எனவே எப்படியாவது ஒரு வழியாக அதை அவரிடம் சொல்லி தேவனுக்காக வேலை செய்து வளர்வதில் அவரை உற்சாகப்படுத்துங்கள். ஒருபோதும், அவரை கீழே இழுத்து விடாதீர்கள். உங்கள் வாயின் வார்த்தைகள் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்கக் கடவது.

நல்லபடியாக கேட்கிறவர்களாக இருங்கள். சில நேரங்களில் உங்கள் கணவர் தன்னுடைய கோபத்தை, பாதிப்பை, பயத்தை உங்களிடம் தான் காட்ட முடியும். உங்களிடம் பகிர்ந்து கொள்ளும் எதையும் நீங்கள் மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளக் கூடாது என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். கணவன் தன் மனைவியில் பாதுகாப்பான நம்பிக்கை கொள்ளக் கூடியளவுக்கு மனைவி நடந்து கொள்ள வேண்டும்.

❖ நான்காவதாக, **உங்கள் குடும்பத்திற்கு இருதயமாக இருங்கள்.** நீதி : 4:23ஐ வாசியுங்கள். ஊழியம் செய்யும் உங்கள் கணவருக்கு அன்பு, சமாதானம், சந்தோஷம் ஆகியவை நிறைந்த குடும்பம்தான் தேவை. மிகவும் அவசரப்பட்டு குடும்பத்தை குலைச்சலாக்கி, சீர்கெடச் செய்து விடாதீர்கள். உங்கள் குடும்பத்தில் உள்ள எல்லோரைக் காட்டிலும்

சீக்கிரமே எழுந்து விடுங்கள். அன்றாடம் சில அமைதியான நேரத்தை தேவனோடு செலவு செய்ய எடுத்துக் கொள்ளுங்கள். உங்களையும், உங்கள் நாளையும் ஒழுங்குபடுத்துங்கள். உங்கள் இலக்கை நோக்கி உங்கள் மனதை செலுத்துங்கள்.

நீதி : 17:22: ஒவ்வொரு நாளையும், மகிழ்ச்சியோடும், நேரான நோக்கத்தோடும் கழிக்க உங்களைத் தயார் செய்து கொள்ளுங்கள். யோபுவின் மனைவியைப் போல் இராதீர்கள்-“தேவனை தூஷித்து ஜீவனை விடும்” என்று சொன்னதை நினைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எந்தக் காரியத்தைச் செய்கிறீர்களோ, அதை ஆசையாய்ச் செய்யுங்கள். முதலாவது, நீங்கள் தேவனுடைய மகிமைக்காக செய்கிறீர்கள் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். பிறகு உங்கள் கணவனுக்கு மகிமையை கொண்டு வருகிறீர்கள். மறந்து விடாதீர்கள். சுயநலவாதிகளாக இருக்காதீர்கள். அப்படியிருந்தால் உங்கள் கணவர் தேவனுக்காக செய்யும் வேலை மங்கிப் போக வாய்ப்புண்டு. நீதி :21:9 ஐ வாசித்துப் பாருங்கள். நினைத்துக் கொள்ளுங்கள், தேவன் உங்களை சிருஷ்டித்ததே உதவி செய்வதற்குத்தான், உபத்திரவப்படுத்துவதற்கல்ல.

(தொடரும்).

**ரேச்சல் ராஜநாயகம்**


கரன் டி.வி.யில்

**திருமறை தியானம்**

**தொலைக்காட்சி நிகழ்ச்சி**

திருமறை ஆசான் இதழின் ஆசிரியர்
திருமறை தியான நிகழ்ச்சியில்
நற்செய்திப் பேருரை ஆற்றுகிறார்.

நாள் : **பிரதி ஞாயிறு**

நேரம் : **மதியம் 1.00 முதல் 1.30 வரை**

**(கோவை, திருப்பூர், ஈரோடு பட்டணங்களில் மட்டும்)**

கண்டு, கேட்டு தேவ ஆசீர்வாதம் பெறுங்கள்.

# அமலேக்கை அழித்துவிடு

ஆக்கலை விட அழித்தல் எளிது என்பர் பெரியோர். செங்குருதி சிந்தி, பல்லாண்டுகள் கடினமாக உழைத்து உருவாக்கிய ஒன்று கண்ணிமைக்கும் நேரத்தில் பொடிப்பொடியாகி அழிந்து அமிழ்ந்தே போய்விடுமென்பது, சரித்திரம் நமக்கு சாட்சி பகருகிற உண்மையாயிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஆனால், தாயின் கருவில் உருவாகி, உலகத்தில் உதித்து, பிஞ்சு மனம் கொண்ட பிள்ளையாக வளரும் போது நாம் கற்றுக் கொள்ளும் எதையும் நம்மை விட்டு அவ்வளவு சீக்கிரமாக அகற்றிவிடவோ அல்லது அழித்துவிடவோ முடியாது. அதுவும் அப்பழக்கம் நமக்கு அன்பானவர்களால், நமது மரியாதைக் குரியவர்களால் கற்றுக் கொடுக்கப்படுமானால் அதைக் குறித்து சொல்லவே வேண்டியதில்லை. அதனால் தான், இவ்வுலகக் கல்வியில் கற்றறிந்த மேதைகளும் ஆவிக்குரிய விஷயத்தில் தடுமாறுவதை இன்றும் நாம் காண்கிறோம்.

இஸ்ரவேல் ஜனம், கானானின் எல்லைக்குள் கடந்து போய் பூலோக ரீதியாக தங்களுக்கென ஓர் எல்லையைப் பெற்றுக் கொண்டு, ஒரு தேசமாய் உருவெடுத்தார்கள். தங்களைத் தேசமாக உருவெடுக்கச் செய்த உன்னதமான தேவன் தங்களை ஆளுகிறார் என்பதை அடியோடு மறந்து, "**அரசன் வேண்டும்**" என்று சுற்றம் பார்த்து குற்றம் புரிந்தவர்களாக மாறினார்கள். கொற்றவன், கொடியவனாக இருப்பானென்று எச்சரிக்கப்பட்டும், கொஞ்சமேனும் அச்சமின்றி ஆபத்தறியாது சுடு நெருப்பில் விரலை விடும் விளையாட்டுப்பிள்ளை போல் "எங்களுக்கு வேண்டும்! அரசன் வேண்டும்!!" என்று தங்கள் உணர்வுகளை கொப்பளிக்க செய்தார்கள். முதல் அரசனாக முடிசூடினான் சவுல் அவனிடம், சாமுவேல் தீர்க்கனை கொண்டு தேவன், "... **நீ போய், அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உடனான எல்லாவற்றையும் சங்கரித்து...**" என்ற கட்டளையைக் கொடுத்தார். இந்நிகழ்விலிருந்து சில ஆலோசனைகளை கவனமாக கற்றுக் கொள்வோம். வாரீர் வாலிபரே!

### யேகோவாநிசி என்ற பலிபீடம்

எகிப்தின் அடிமை சங்கிலி தெறிபட்டது, செங்கடல் கடந்து, விடுதலை கீதம் முழங்கி, விண்ணவரின் ஒத்தாசையால். பல தேசத்து முடிகளை முறியடித்து, வெற்றி முரசடித்த இஸ்ரவேல் ஜனங்கள், ஆனந்தக் களிப்பில், ஆர்ப்பரித்து, ஆதரவாக தங்களோடிருந்த ஆண்டவரை அண்டிக் கொண்டு ரெவிதீம் மட்டும் வந்தார்கள். அவ்விடத்தில் தான், அமலேக் என்னும் பெயர் கொண்ட ஒரு ஜனக்கூட்டத்தார், போர்க் கவசங்கள் பூண்டு, கரங்களில் வாளேந்தி, வையத்து மாந்தர்களுள் தேவன் தனக்கென்று

பிரித்தெடுத்த இஸ்ரவேல் ஜனங்களோடு யுத்த களத்தில் குதித்தார்கள். யோசுவாவின் தலைமையில் இஸ்ரவேல் ஜனம் வெற்றிக் கனியை ஜெயவேந்தராம் யெகோவாவிடமிருந்து பெற்றுக் கொண்டது.

பரலோக தேவனின் கொடைக்கரங்களில் பெற்றுக் கொண்ட வெற்றிக்கு நன்றியாக, பூமியிலே சாந்தவானாக இருந்த மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டி, தேவனே தங்களில் ஜெயக்கொடியாக இருக்கிறார் என்பதை குறிப்பதற்காக யேகோவாநிசி என்று அதற்குப் பெயரிட்டான். அத்தருணத்தில் இக்கொடிய செயலைப் பற்றி மோசே சொல்வதைக் கவனியுங்கள் **"அமலேக்கின் கை கர்த்தருடைய சிங்காசனத்துக்கு விரோதமாயிருந்த படியால், தலைமுறை தலைமுறைதோறும் அவனுக்கு விரோதமாய் கர்த்தருடைய யுத்தம் நடக்கும் என்றான்"** (யாத்.17:16) வாலிபர்களே! கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாக நாம் செய்யும் யுத்தம் கர்த்தருடைய சிங்காசனத்துக்கு விரோதமாக செய்யப்படுகிறது என்பதை நாம் இங்கே கவனிக்க வேண்டும்.

கர்த்தருக்கு விரோதமானவைகளை "அழித்துவிடு" என்று இஸ்ரவேலின் முதல் கோனாகிய சவுலிடம் கட்டளையாகக் கொடுத்தார், ஜகக்கோனாகிய சர்வவல்ல தேவன். ஆனால், அவனோ, ஜனங்களுக்குப் பயந்து (I சாமு 15 : 24) ஆடு, மாடுகளில் பிரதானமானவைகளைப் பிடித்துக் கொண்டு வந்தான் (I சாமு 15 : 21) குடிகள் தவறு செய்தால், நீதியின் செங்கோலால் அதை சீர் செய்ய வேண்டிய கொற்றவன் குடிகளுக்குப் பயந்து கோழையானான். வாலிபர்களே! நாமும் தேவனுக்கு விரோதமான பாவங்களை அழிக்க வேண்டுமென கட்டளை பெற்றிருக்கிறோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

எனக்கன்பானவர்களே, இன்று அநேகர் பக்தியுள்ள இளைஞர்களைப் பார்த்து, "முற்றும் துறந்த முனி" என்றும் "சன்யாசி", என்றும், இவன் வாழ்க்கையில் இன்னும், சினிமா பார்த்ததில்லையாம், சிகரெட் பிடித்ததில்லையாம், இவனெல்லாம் ஒரு இளைஞனா! இளைஞர் சமுதாயத்திற்கே இவன் லாயக்கற்றவன் என்று நகையாடுவதுண்டு. இன்னும் பரிதாபகரமானது யாதெனில், இச்சைகளை தவிர்க்க முயலும் வாலிபர்களுக்கு பலவிதமான பரிகாசங்கள் காத்திருக்கிறது என்பது தான். வாலிபனே! இவைகளைக் கண்டு, சோர்ந்து போகாதே! இஸ்ரவேலர், கானான் தேசத்தை சுதந்தரிப்பதற்காக கடந்து போகையில், அவர்களை தடை செய்து, அவர்களோடு யுத்தம் புரிந்தது போல், பரமக்கானானை நோக்கிய நமது யாத்திரையில் நம்மை தடை செய்யவே இப்படிப்பட்ட காரியங்கள் நடப்பிக்கப்படுகிறது. **அமலேக்கியரை தேவன் என்ன செய்தார் என்பதைக் கண்டீர்களே! அதைப் போலவே நம்முடன் ஆவிக்குரிய யுத்தம் புரிகிறவர்களோடு என்றென்றும் தேவன் யுத்தம் செய்வார்.** அவர்கள் மனந்திரும்பாத பட்சத்தில் அவர்களை தேவன் நிச்சயம் மடங்கடிப்பார்.

வாலிபரே, நீங்கள் இன்னொன்றை மறந்து போகக் கூடாது, அவர்களுடைய துன்மார்க்க உளையிலே நீங்கள் விழாமலிருக்கிறதினாலே

அவர்கள் ஆச்சரியப்பட்டு, உங்களைத் தூஷிக்கிறார்கள் ( I பேதுரு 4 : 4) இப்படிப்பட்டவர்கள், தாங்கள் பாவம் செய்வதோடு நிறுத்தாமல், அப்படி பாவங்களைச் செய்கிறவர்கள் மேல் பிரியமாக இருப்பதோடல்லாமல், அவர்களை உற்சாகப் படுத்துவதுமுண்டு (ரோமர் 1 : 32) என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இவர்களோடு நாம் சம்பாசனை செய்து, அவர்களை போல மாறிவிடாமலும் நமது நல்லொழுக்கங்களை கெடுக்காமலும் (I கொரி 15 : 33) இருக்க நமது உள்ளங்களிலிருந்து அவர்களை சங்கரிக்க வேண்டும். இப்படிச் செய்யாமல் கண்களுக்கு கொழுமையாக தெரிந்த பிரதானமான ஆடு, மாடுகளை அழிக்க மனதில்லாமல், "தேவனுக்காக" என்று பாசாங்கு செய்த சவுல் ராஜாவைப் போல, நாமும், நம்மை பாவத்திற்குட்படுத்தும் நண்பர்களை விட்டுப் பிரிய மனதில்லாமல், "தேவனுக்காக" அவர்களை ஆதாயப்படுத்தத் தான் அவர்களோடு சேருகிறேன் என்று சொல்லி நம்மை நாமே ஏமாற்றி, அவர்களின் வலையில் சிக்கிவிடாமலிருப்பது சாலச் சிறந்தது.

இஸ்ரவேலர்களின், கானானிய யாத்திரையில், அமலேக்கியர் அவர்களோடு யுத்தம் புரிந்தார்கள் என்பதை, நாம் கண்டறிந்தோம், அப்படி யுத்தம் புரிகையில், இவர்கள் அதற்கான பூரிகை முழங்கி, சண்டையில் சந்திக்கிறவனை யுத்தத்திற்கு ஆயத்தப்படு என எச்சரித்து, நேருக்கு நேராக, நெஞ்சரத்துடன் அவர்களோடு போராடியிருக்கிறார்களா என்றால், இந்தப் பாதகர்களோ! இஸ்ரவேலர்கள், இளைத்து விடாய்த்திருக்கையில் பின்வருகிற அவர்களது பாளையத்திலுள்ள பலவீனர்களையல்லவா வெட்டிச் சாய்த்திருக்கிறார்கள் (உபா 25 : 18).

அமலேக்கு அஞ்சா நெஞ்சனா? என்று யாராவது கேட்டால், அவர்கள் செய்த இந்தச் செயல், அவர்களை கோழைத்தனத்தின் மொத்த உருவாக அல்லவா காட்டுகிறது. **வாலிபனே! இன்றும் உன்னை ஆவிக்குரிய விஷயத்தில் தடுமாறச் செய்கிறவன், உனக்கு முன் நின்று யுத்தம் புரிவதில்லை, நீ ஆவிக்குரிய ரீதியில் பெலமாக இருக்கையில் உன்னை களத்தில் சந்திப்பதில்லை,** அமலேக்கை போல தேவ பயமில்லாதவர்கள் (உபா 25 : 17) பின்வழியாக வந்துன்னை கலங்கடிப்பார்கள் என்பதை அறிந்து விழிப்பாயிரு. கனிவான பேச்சு, அன்பான தோற்றம், அரவணைக்கும் கரங்கள் இவைகளையெல்லாம் கண்டு மயங்கி, உன்னதரின் பாதையை விட்டு விலகி விடாதே.

இஸ்ரவேலின் ஜெயபலமான தேவன், கீசின் குமாரனாகிய சவுலிடம், இப்படிப்பட்ட அமலேக்கை அழித்து விடு என்றார், அவனோ மந்தையில் பிரதானமானதை தப்பவிட்டான். வாலிபர்களாகிய நாமும், இந்த அமலேக்கைப் போல குணங்களையும், அமலேக்கைப் போல நண்பர்களையும், நம்மை விட்டு அகற்ற வேண்டுமென்று தேவன எதிர்பார்க்கிறார் என்பதால், நாம் சவுலைப் போல் இராமல், தேவனுக்கு பிரியமாக நடப்போமாக! ஆமென்!

**J. பிக்கின்ஸ்**

# I தீமோத்தேயு ஒரு கண்ணோட்டம்

ஆசிரியர் : அப்போஸ்தலனாகிய பவுல்

காலம் : கி.பி. 64 (or) 65


## தீமோத்தேயு மற்றும் இந்நூல் பற்றி

1. விசுவாசத்தில் உத்தம குமாரன் (1:2)
2. லீஸ்திரா பட்டணத்தைச் சேர்ந்தவன் (அப்.16:1)
3. தகப்பன் கிரேக்கன் தாய் யூதஸ்திரீ (அப்.16:1-3)
4. தாயும், பாட்டியும் வேத எழுத்துக்களை சிறுவயது முதல் போதித்துள்ளனர். (II தீமோ.1:5).
5. தன்னுடைய இரண்டாம் நற்செய்திப் பயணத்தில் பவுல் இவனைச் சேர்த்துக் கொண்டான். (அப்.16:1-3).
6. இந்நூல் எழுதப்பட்ட போது கொள்கைப் பிரச்சினை சபைகளில் தலைதூக்க ஆரம்பித்து விட்டது.
7. குறிப்பாக, யூத கொள்கைகளும், கிரேக்க தத்துவங்களும் ஒன்றோடு ஒன்று கலந்து விட்டது. (I தீமோ.4:1-5)
8. தேவனுடைய சபையில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென போதிக்கும்படி கட்டளையிடப்பட்டான்.

## இந்நூலின் செய்தி

1. கள்ளப் போதகர்கள் சபையில் தொடர்ந்து இருப்பார்கள். (அப்.20:26-32, I தீமோ.1:3-11)
2. ஆராதனையிலும் மற்ற ஊழிய காரியங்களிலும் ஆண்களுக்கே தலைமைப் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. (I தீமோ.2:1-15).
3. பெண்கள் அடக்க முடையவர்களாயிருந்து, அமைதலோடே கற்றுக் கொள்ள வேண்டும் (I தீமோ. 2 : 9-'5)
4. தகுதிவாய்ந்த மூப்பர்களும், உதவிக்காரர்களும் சபைக்கு அவசியமாயிருக்கிறார்கள்.
5. தகுதிவாய்ந்த மூப்பர்கள், சபையால் தாங்கப்பட வேண்டும் (Iதீமோ.5:17,18)
6. உலக சம்பத்து ஒன்றுக்கும் உதவாதது. (I தீமோ.6:5-19).

# வேதாகமத்தின் முதல் தீர்க்கதரிசனம்



அன்பார்ந்த எனதருமை சிறுவர்களே! இம்மாதமும் உங்களை இவ்விதழின் மூலம் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

சிறுவர்களாகிய நாம் வேதாகம சம்பவங்கள் மற்றும் கதைகளை மாத்திரம் கேட்கிறவர்களாக இல்லாமல், வேதாகம உண்மைகளை அறிந்து கொள்வதிலும் நாட்டமுள்ளவர்களாயிருக்க வேண்டும். அப்பொழுது தான், தேவ காரியத்தில் நாம் சரியான அஸ்திபாரமுடையவர்களாயிருக்க முடியும். ஆகவே, இப்பொழுது நாம், வேதாகமத்தின் முதல் தீர்க்கதரிசனம் குறித்துக் கொஞ்சம் அறிந்து கொள்வோம்.

ஆதித் தகப்பனாகிய ஆதாமும், ஏவாளும் தேவனால் விலக்கப்பட்ட கனியைப் புசித்து, பாவத்தை இந்த உலகிற்குள் கொண்டு வந்ததற்குப் பிறகு, அதற்கான தண்டனையாக, ஏதேன் தோட்டத்தை விட்டு நம்முடைய தேவனால் வெளியேற்றப்பட்டனர்.

ஆனால், பிரச்சினை அத்தோடு தீர்ந்து போகாமல், அவர்களுடைய பாவம் சம்பந்தமாக ஏதோ ஒன்று செய்ய வேண்டியிருந்தது. அவர்கள் பாவிகளான போதும், அன்பான நமது தேவன் அவர்களைத் தொடர்ந்து நேசித்தார். பாவம், பிரச்சினையின் முடிவாக இருக்க அவர் அனுமதிக்கவில்லை. தீமையைப் பார்க்கக் கூடாத சுத்தக் கண்ணனாகவும், பரிசுத்தராகவும் அவர் இருக்கிறபடியால், பாவம் மன்னிக்கப்படாமல் இருப்பதை தேவன் விரும்பவில்லை. (ஆபகூக் 1:13). பாவத்திலிருந்து ஆதாமும், ஏவாளும் இன்னும் எல்லா ஜனங்களும் மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளும்படியாக தேவன் ஏற்கனவே ஓர் அருமையான திட்டத்தைத் தீட்டினார்.

இந்த மகா பெரிய இரட்சிப்பின் திட்டம் பற்றிய குறிப்பு, ஆதாமும், ஏவாளும் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்படுவதற்குக் கொஞ்சம் முன்னதாகக் கொடுக்கப்பட்டது. தேவன் சாத்தானைக் கடிந்து கொண்டு, **"உனக்கும், ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுககுவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்**" (ஆதி.3:15). இப்படிச் சொன்னதன் மூலமாக, தேவன் அங்கே எதைச் சொல்லியிருக்கிறார் என நினைக்கிறீர்கள்?

அதாவது, சாத்தானுக்கும், அவனைப் பின்பற்றுகிறவர்களுக்கும், தேவனைப் பின்பற்றுகிறவர்களுக்குமிடையே எப்பொழுதும் பிரச்சினை இருக்குமென்று சொல்லியிருக்கிறார் (மத்.23 : 33, யோவா-8:44; I யோவா.3:10, சங்.22:30) ஏதேனிலிருந்து இன்றுவரை, ஜனங்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாதபடி சாத்தான் முயற்சித்துக் கொண்டேயிருக்கிறான். நீதிமான்களும், அநீதிமான்களும் எப்பொழுதும் ஒருவருக்கொருவர் ஒவ்வாதவர்களாகவே இருந்து வருகின்றனர். தேவன், இந்த பிரச்சினையை எப்படிக் கையாளப் போகிறேன் என்று அங்கே சொல்லியுள்ளார். "அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" என்று.

ஜனங்கள் பாவம் செய்யும்படியான சகல வழிகளையும், சாத்தான் செய்து பாவத்திலிருந்து அவர்கள் இரட்சிக்கப்படாதபடி தேவனைத் தடுத்தாலும், ஜனங்கள் பாவ மன்னிப்புப் பெறும்படியான வழியை தேவன் உண்டாக்குவார்.

இயேசு சிலுவையில் மரித்த போது, அவர் மிகவும் பாடுபட்டார் (சாத்தானாலே "அவர் குதிங்கால் நசுக்கப்பட்டது)". ஆனால், அவருடைய மரணம், தேவன் பாவத்தை மன்னிக்கும்படியாகச் செய்தது. (சாத்தான் தலை நசுக்கப்பட்டது)! இப்பொழுது சாத்தானுடைய வல்லமையிலிருந்து ஜனங்கள் தப்பமுடியும். (அப்.26:18 ரோம.16:20) ! ஜனங்கள் மன்னிப்புப் பெறுவதைத் தடுத்து நிறுத்தும் சாத்தானின் முயற்சியானது, கிறிஸ்துவின் சிலுவை மரணத்தால் அழிக்கப்பட்டது (எபி.2:14, I யோவா.3:8). நம்முடைய தேவன் மனிதனுக்காக எவ்வளவு பெரிய காரியம் செய்திருக்கிறார் பாருங்கள்.

ஆகையால், தேவனுக்கு நம்முடைய இந்தச் சிறிய பிராயத்திலிருந்தே நாம் ஒவ்வொருவரும் உண்மையுள்ள வர்களாக இருக்க வேண்டும். அப்படி இருப்போமா?

**ABEL. R. NAYAGAM**

# போதிக்கப்பட்ட விசுவாசம்

கிறிஸ்துவைப் பற்றி நான் மற்றவர்களுக்கு எடுத்துக் கூறும் போது அடிக்கடி அவர்கள் கூறும் வார்த்தை, நான் நன்றாகத்தான் இருக்கிறேன். விசுவாசத்தோடு இருக்கிறேன் என்பது. ஆனால், அவர்களோடு உரையாடும் போது அவர்களிடத்தில் போதிக்கப்பட்ட விசுவாசம் இல்லை என்பது தெரிகிறது. நற்சாட்சிப் பெற்றிருந்த உண்மையான கிறிஸ்தவர் தொலைகாட்சியில் இதைக்குறித்து தெளிவுபடுத்தி இருந்தார். தான் இயேசுவானவரோடு இருப்பதை எதிர்பார்க்கிறபடியால் மரணத்தை ஆர்வத்தோடு எதிர் நோக்குவதாகக் கூறினார். கிறிஸ்துவின் மரணம், அடக்கம் உயிர்த்தெழுதலைக் குறித்து வேதாகமம் என்ன கூறுகிறதோ அதையே தனது நம்பிக்கை என்னும் விசுவாசம் சார்ந்திருப்பதாக அவர் விளக்கினார். அவரை பேட்டி கண்டவர் மரண பயம் கொண்டிருந்த ஒரு நாத்திகர் (கடவுள் இல்லை என்று சொல்பவர்). மரியாதையான குரலில் நீர் பயப்படவில்லை. ஏனென்றால் நான் அறியாத ஒன்றை நீர் அறிந்திருக்கிறீர் என்று ஒப்புக் கொண்டார். வேத வசனங்கள் தேவனால் போதிக்கப்படும் விசுவாசத்தின் அவசியத்தை வெளிப்படுத்துகின்றன. வாழ்க்கையின் அவலமான நிலையை இந்தப்பகுதி சுட்டிக் காட்டுகிறது. எங்கும் அநீதி அக்கிரமம் துன்மார்க்கம் எல்லாம் நிறைந்திருக்கிறது. (பிர.3 ; 16,18,21) மரணம் தவிர்க்க முடியாததாய் இருக்கிறது. அவிசுவாசிகள் நம்பிக்கைக்கான எந்த முகாந்திரத்தையும் பெற்றிராதபடியால் இருப்பதை விட இறப்பதே மேல் என்று கூறுகிறது (பிர.3 : 22, 4 : 3) ஆனால் இறுதியில் தேவன் அனைத்துக் காரியங்களையும் சரி செய்வார் என்ற விசுவாசியின் நம்பிக்கையையும் கூட இந்தப் பகுதி காட்டுகிறது (பிர 3 : 17).

வேதாகம போதனைப் பெற்ற விசுவாசம் தேவையாயிருக்கிறது என்று அப்போஸ்தலனாகிய பவுல் திட்டவட்டமாக கூறுகிறார். வாலிப ஊழியக்காரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, தீமோத்தேயுவை விசுவாசத்தில் உத்தம குமாரனென்று சாட்சி கூறுகிறார் (I தீமோ 1 : 2) பவுல் தீமோத்தேயுவுக்கு போதித்த அதே விசுவாசத்தை மற்றவர்களுக்கு போதிக்க வேண்டும் என்று எழுதுகிறார் (I தீமோ 1: 3, II. தீமோ 2 : 4, 5)

பிலேமோனின் விசுவாசத்தைக் குறித்தும் இங்கே பவுல் கூறுவதைக் கீழ்க்கண்ட வசனப் பகுதியில் பார்க்கலாம். (பிலேமோன் 1 : 4 முதல் 7 வரை) அப்போஸ்தலனாகிய யாக்கோபு கூறுகிறார் (யாக் 2:1) கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தைப் பட்சபாதத்தோடே பற்றிக் கொள்ளாதிருப் பீர்களாக. ஒருவன் தனக்கு விசுவாசம் உண்டென்று சொல்லியும் கிரியை

இல்லை என்றால் அவனுக்குப் பிரயோஜனம் ஒன்றும் இல்லை. அந்த விசுவாசம் செத்ததாயிருக்கிறது (யாக் 2 : 14, 17) இப்படிப்பட்ட செத்த விசுவாசம் அநேகரிடத்தில் காணப்படுகிறது. விசுவாசம் இல்லாதவர்களும் கிரியை இல்லாதவர்களும் இவைகளைக் குறித்து போதிக்கும் போது, அவர்களிடத்தில் இருப்பதைப் போல் பேசுவார்கள். இவர்கள் யார் என்றால் தங்களை மூப்பர்கள் என்றும் ஊழியக்காரன் என்றும் போதகர் என்றும் விளம்பரப்படுத்திக் கொண்டாலும் அதற்கு தகுதியே இல்லாமலும் தங்களை யாரும் எதுவும் கேட்க விருப்பப்படாதவர்கள். இப்பேர்பட்டவர்களின் மூலம் சபைக்கும் சபையைச் சார்ந்தவர்களுக்கும் அவப்பெயரை உண்டாக்குகிறவர்கள் அநேகர் இரட்சிக்கப்பட தடையாயிருக்கிறார்கள். அநேகருடைய பின்மாற்றத்துக்கும் அவிசுவாசத்திற்கும் இவர்கள் காரணமாயிருப்பதைப் பார்க்க முடிகிறது. விசுவாச துரோகிகள் என்று வேதம் இவர்களை அடையாளம் காட்டுகிறது. விசுவாசமாகிய கப்பலை சேதப்படுத்து கிறவர்களும் இப்பேர்ப்பட்டவர்களே. இவ்விதமான காரியத்தைச் செய்த இரண்டு அவிசுவாசிகளை புதிய ஏற்பாட்டில் அடையாளம் காட்டப்பட்டிருக்கிறது. அவர்கள்தான் இமெனேயும், அலெக்சந்தரும் (I தீமோ 1 : 19 - 20)

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த மானிட உலகில் வாழ்ந்த போது தமது மரணத்தைக் குறித்தும், உயிர்த்தெழுதலைக் குறித்தும் தம்முடைய சீஷர்களுக்கு அனேக முறை சொல்லி **நினைவூட்டினார்.** அவர்களுக்கு முன்பாகவே அனேக அற்புத அடையாளங்கள் செய்து தான் தேவனுடைய குமாரனென்பதை நிரூபித்தார். ஆனால் அவர்களோ அவிசுவாசிகளாய் ஆண்டவரின் உயிர்த்தெழுதலை விசுவாசியாமற் போய் அவருடைய மரணத்தை நினைத்து இருதயத்தில் கலக்கமுற்றிருந்தார்கள்.

இயேசு கிறிஸ்துவோ அவர்களுடைய இருதயத்திலிருந்த அவிசுவாசத்தை அறிந்து அவர்களை திடப்படுத்தினார். நீங்கள் கலங்காமல் இருங்கள், என் பிதாவினிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள் என்றார் (யோ 14 : 1-4). மேலும் என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான், ஏனென்றால் நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்றார். தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவனையும் அவர் எழுப்ப வல்லவராயிருக்கிறார்.


வேதாகம போதனை பெற்ற விசுவாசம், கிறிஸ்துவின் மீதும் அவருடைய மரணம், அடக்கம் உயிர்த்தெழுதல் மீது மையம்

கொண்டிருக்கிறது. (I கொ 15 : 1 முதல் 4 வரை) கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் (வ.3.4) இப்படிப்பட்ட விசுவாசம் மட்டுமே இரட்சிப்பையும் ஆறுதலையும் கொண்டு வர முடியும். நித்தியத்தை நாம் பரலோகத்தில் கழிப்போம் என்ற நம்பிக்கையும் அது நமக்கு அளிக்கிறது. ஆகவே இதை வாசித்து முடிக்கப் போகின்ற என் அருமை நண்பர்களே, கிறிஸ்துவை குறித்து போதிக்கப்பட நீங்கள் ஆயத்தமா? ஆயத்தம் என்றால் உங்கள் ஊரில் போதிக்கப்பட்ட விசுவாசமார்க்கத்தார் கிறிஸ்துவின் சபையார் இருந்தால் அவர்களை நாடுங்கள். தேவ ஜனங்களே உங்களுக்கு போதிக்கப்பட்ட, விசுவாசத்தில் நீங்கள் திடமாய் இருக்கிறீர்களா அல்லது அவிசுவாசமாயிருக்கிறீர்களா, உங்களை நீங்களே சோதித்தறியுங்கள். மரிப்பதற்கு ஆயத்தமாயிருப்பவர்கள் வாழ்வதற்கும் ஆயத்தமாயிருக்கிறார்கள் (பரலோகத்தில்)

**யோசுவா செல்வம்**

# நடப்புச் செய்திகள்


1. இந்தியா - தாய்லாந்து நாடுகளுக்கிடையே ஐந்து முக்கிய ஒப்பந்தங்களில் கையெழுத்தாகியுள்ளது.
2. இனிமேலும், பாகிஸ்தான் தீவிரவாதத்தை தூண்டுமானால், அதற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் - தாய்லாந்தில் வாஜ்பாய் பேச்சு.
3. ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு நக்சலைட்டுகளின் கண்ணிவெடித் தாக்குதலில் மயிரிழையில் உயிர் தப்பினார்.
4. ஸ்ரீபெரும்புதூரில் அமைக்கப்பட்டிருக்கும், ராஜீவ் நினைவிடத்தை, ஜனாதிபதி நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
5. ஐந்து மாநில தேர்தல் : தேர்தல் கமிஷன் தேதிகள் அறிவிப்பு.
6. இந்திய - நியூசிலாந்துக்கிடையேயான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டிராவில் முடிந்தது.
7. அமெரிக்காவில் சிகிச்சை பெற்ற டென்னிஸ் விளையாட்டு வீரர் லியாண்டர் பயஸ் நாடு திரும்பினார்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45-9.00 p.m.<br>9.00-9.15 p.m. | Box 3815<br>New Delhi-110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00-2.15 p.m. | Box 80<br>Kakinada-533001 | Joshua Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45-7.00 p.m.<br>5.45-6.00 p.m.<br>5.30-5.45 p.m. | Box 8405<br>Bangalore-560084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45-4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit College,<br>Trivandrum-695034 | P.K. Varghese |



***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WPP / 2003

**Registered News Paper**
**RNI No. 47661 / 87 - New Delhi**
Annual Subscription Rs. 30/-

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**பரிசுத்த**
**வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு**

## ஓர் இனிய செய்தி

**ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட**

### ஓர் இலவசப் பயிற்சி

**இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு**

**சான்றிதழ் வழங்கப்படும்.**

**பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

**இயக்குநர்,**
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
**த.பெ.எண்-27, காங்கேயம்-638 701.**
**தமிழ்நாடு. இந்தியா.**

Published by **Church of Christ, Kangayam**
Printed at Konar Printers, Madurai - 625 012. **Editor : S. Rajanayagam**

DESIGNED BY [illegible] ERODE © 2254804